(ஒன்பதாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

**இல. 29.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2022 நவம்பர் 10 வியாழக்கிழமை  மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ  மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

**கௌரவ  அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

---

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க,** இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் சனாதிபதி அவர்கள்.

**கௌரவ தினேஷ் குணவர்தன,** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கமத்தொழில் அமைச்சர் மற்றும் வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி நிமல் சிறிபால த சில்வா,** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா,** கடற்றொழில் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ நலின் பிரனாந்து,** வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ,** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்

**கௌரவ விதுர விக்ரமநாயக,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். யூ. எம். அலி சப்ரி,** வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ திலும் அமுனுகம,** முதலீட்டு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அ. அரவிந்த் குமார்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) டயனா கமகே,** சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்,** கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரேமலால் ஜயசேக்கர,** துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாமர சம்பத் தசனாயக,** ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா,** கடற்றொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சனத் நிசாந்த,** நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அனுப பஸ்குவல்,** சமூக வலுவூட்டுகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜகத் புஷ்பகுமார,** வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக்க பிரியந்த,** உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாந்த பண்டார,** வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தாரக்க பாலசூரிய,** வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** பிரிவெனாக் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கே. காதர் மஸ்தான்,** கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ,** நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தேனுக விதானகமகே,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ச. வியாழேந்திரன்,** வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செஹான் சேமசிங்க,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்**

**கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா**

**கௌரவ கபில அதுகோரல**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி தலதா அதுகோரல**

**கௌரவ சம்பத் அதுகோரல**

**கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

கௌரவ ரோஹித அபேகுணவர்தன

கௌரவ வஜிர அபேவர்தன

கௌரவ அஸோக அபேசிங்ஹ

கௌரவ துஷார இந்துனில் அமரசேன

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்

கௌரவ தவராஜா கலை அரசன்

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ டலஸ் அழகப்பெரும

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே

கௌரவ திஸகுட்டி ஆரச்சி

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர

கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன

கௌரவ லலித் எல்லாவல

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்

கௌரவ பைஸால் காசிம்

கௌரவ ஜயந்த கெட்டகொட

கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ உதயன கிரிந்திகொட

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ வேலு குமார்

கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ மனோ கணேசன்

கௌரவ உதய கம்மன்பில

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ உதயகாந்த குணதிலக்க

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ தயாசிறி ஜயசேக்கர

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ ஜனக பண்டார தென்னகோன்

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ துமிந்த திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ விமலவீர திசாநாயக்க

கௌரவ சாரதீ துஷ்மந்த

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ (டாக்டர்) கயாஷான் நவனந்த

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்

கௌரவ டிலான் பெரேரா

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ சுதத் மஞ்சுல

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ சட்டத்தரணி அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ அலி சப்ரி ரஹீம்

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ

கௌரவ சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ

**கௌரவ மஹிந்த ராஜபக்ஷ**

**கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ**

**கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்**

**கௌரவ நிமல் லான்சா**

**கௌரவ காமினி லொக்குகே**

**கௌரவ காமினி வலேபொட**

**கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ**

**கௌரவ க.வி. விக்னேஸ்வரன்**

**கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான**

**கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே**

**கௌரவ ஹேஷா விதானகே**

**கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி**

**கௌரவ விமல் வீரவங்ச**

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க**

**கௌரவ வீரசுமன வீரசிங்ஹ**

**கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர**

**கௌரவ குமார வெல்கம**

**கௌரவ சிவஞானம் சிறீதரன்**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ ஜோன் செனவிரத்ன**

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

**கௌரவ ஜயரத்ன ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திருமதி குஷானி ரோஹனதீர, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. *சபாநாயகரின் அறிவித்தல்கள்:*** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:—

''அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்ட "சேர் பெறுமதி வரி (திருத்தம்)" என தலைப்பிடப்பட்ட சட்டமூலம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்மானம் எனக்கு கிடைத்துள்ளது என்பதை நான் பாராளுமன்றத்துக்கு அறிவிக்க விரும்புகிறேன்.

சட்டமூலத்தின் ஏற்பாடுகளின் ஒட்டுமொத்த பரிசீலனையின் பிரகாரம், கற்றறிந்த பிரதி மன்றாடி தலைமையதிபதியினால் முன்மொழியப்பட்டவாறு பாராளுமன்றத்தின் குழுநிலையின் போது பின்வரும் திருத்தங்கள் பிரேரிக்கப்படுவதற்கு அமைவாக குறித்த சட்டமூலம் முழுமையாக அரசியலமைப்பின் ஏற்பாடுகளுடன் முரணாக இல்லை என்ற அபிப்பிராயத்தை, உயர் நீதிமன்றம் கொண்டுள்ளது:-

(i) வாசகம் 3

10(1) ஆம் பிரிவுக்கு பின்வரும் காப்புவாசகத்தை உள்ளடக்குதல் -

"ஆயின் மேலும், (vii) ஆம் பந்தியின் நோக்கத்துக்காக, பதிவுசெய்வதற்கான தேவைப்பாடு திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து எழுதல் வேண்டும்."

(ii) வாசகம் 4(1)

"2022 செப்டெம்பர் 30" என்னும் குறிப்பீட்டை நீக்கி அதை "2022 நவம்பர் 30" என்பதால் பதிலீடு செய்தல்.

(iii) வாசகம் 4(2)

"2022 ஒக்டோபர்1" என்னும் குறிப்பீட்டை நீக்கி அதை "2022 டிசெம்பர் 1" என்பதால் பதிலீடு செய்தல்.

உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்மானத்தை இன்றைய சபை நடவடிக்கையின் அதிகார அறிக்கையில் அச்சிடுவதற்கு நான் கட்டளையிடுகிறேன்."

**2. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1)கல்வி அமைச்சர், 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கையை நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) கல்வி அமைச்சர், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான செலவினத் தலைப்பு இல.04 - உயர் நீதிமன்ற நீதியரசர்களின் செயலாற்றுகை அறிக்கைகளைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) கல்வி அமைச்சர், 2019 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை ஒலிபரப்புச் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை வெகுசன ஊடக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) கல்வி அமைச்சர்—

(i) 2020 ஆம் ஆண்டுக்கான தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் ஆண்டறிக்கை; மற்றும்

(ii) 2020 ஆம் ஆண்டுக்கான தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர், 2021 ஆம் ஆண்டுக்கான சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(6) புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர், 2021 ஆம் ஆண்டுக்கான முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் முன்னேற்ற அறிக்கையை அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** (1) கமத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் தவிசாளர் கௌரவ மஹிந்த அமரவீர அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட –

(i) 2020/2021 ஆம் ஆண்டுகளுக்கான வரையறுக்கப்பட்ட பொஸ்பேட் நிறுவனத்தின் ஆண்டறிக்கை; மற்றும்

(ii) 2020 ஆம் ஆண்டுக்கான ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் தவிசாளர் கௌரவ சனாதிபதி சட்டத்தரணி (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையை சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் தவிசாளர் கௌரவ சனாதிபதி சட்டத்தரணி (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ —

(i) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகர அவுடதங்கள் (திருத்தச்) சட்டமூலம்; மற்றும்

(ii) கண்டிய திருமண, மணநீக்கம் (திருத்தச்) சட்டமூலம்

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையை சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

வெலிவேரிய, எம்பரலுவ வடக்கு, இல. 122/2 இல் வதியும் திரு. எம்.ஏ. விஜேநாயக்கவினது 2022.10.19 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ அஜித் மான்னப்பெரும சமர்ப்பித்தார்.

மேற்படி மனு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. பாராளுமன்ற அலுவல்கள் (இல. 1):** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 14 ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. பாராளுமன்ற அலுவல்கள் (இல. 2):** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— "ஒதுக்கீட்டுச்" சட்டமூலம் (2023) இன் பரிசீலனைக்காக பாராளுமன்ற நிலையியற் கட்டளை 75(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள "இருபத்தி ஆறு" எனும் சொற்களுக்குப் பதிலாக "இருபது" எனும் சொல்லை இடுவதன் மூலம் இக்கட்டளை தொழிற்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. பாராளுமன்ற அலுவல்கள் (இல. 3):** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2022 நவம்பர் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 16 ஆம் திகதி புதன்கிழமை, 17 ஆம் திகதி வியாழக்கிழமை, 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, 19 ஆம் திகதி சனிக்கிழமை, 21 ஆம் திகதி திங்கட்கிழமை மற்றும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆகிய நாட்கள் "ஒதுக்கீட்டுச்" சட்டமூலம் (2023) இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களாகுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. பாராளுமன்ற அமர்வுகள் (இல. 1):** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், 2022 நவம்பர் 14 ஆம் திகதி, திங்கட்கிழமை சபை அமர்வு தினமாக இருக்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. பாராளுமன்ற அமர்வுகள் (இல. 2) :** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 75(2) இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், "ஒதுக்கீட்டுச்" சட்டமூலம் (2023) இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களான 2022 நவம்பர் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 21 ஆம் திகதி திங்கட்கிழமை வரையிலான நாட்களில் சபை அமர்வு நேரங்கள் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 6.00 மணி வரை இருக்குமாக. பி.ப. 5.30 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் 8(5) ஆம் மற்றும் (6) ஆம் பந்திகள் தொழிற்படுமாக. பி.ப. 6.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. பாராளுமன்ற அமர்வுகள் (இல. 3) :** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 75(2) இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், “ஒதுக்கீட்டுச்” சட்டமூலம் (2023) இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட தினமாகிய 2022 நவம்பர் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 5.00 மணி வரை இருக்குமாக. பி.ப. 5.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**11. சிறுகோரிக்கை நீதிமன்றங்களின் நடவடிக்கைமுறை (திருத்தச்) சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

“இச்சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக”என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

(மு.ப. 11.13 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

“கௌரவ வீரசுமன வீரசிங்க தலைமைதாங்குவாராக” என சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 1.27 மணிக்கு கௌரவ வீரசுமன வீரசிங்க தலைமை தாங்கினார்.)

“கௌரவ இம்ரான் மஹ்ரூப் தலைமைதாங்குவாராக” என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.19 மணிக்கு கௌரவ இம்ரான் மஹ்ரூப் தலைமை தாங்கினார்.)

“கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே தலைமைதாங்குவாராக” என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.45 மணிக்கு கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே தலைமை தாங்கினார்.)

(பி.ப. 4.50 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்றது.

“சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக” என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 முதல் 35 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

அட்டவணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

“சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

“சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக” என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்படி சட்டமூலம் மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**12. நீதித்துறை (திருத்தச்) சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

“சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக” என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்றது.

“சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக” என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 முதல் 5 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

6 ஆம் வாசகம்

5 ஆம் பக்கத்தில் 1 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"நீதிபதியும், மேலதிக நீதிவானும் அல்லது மேலதி ஆரம்ப'';

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

7 மற்றும் 8 ஆம் வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

9 ஆம் வாசகம்

11 ஆம் பக்கத்தில் 1 ஆம், 2 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"ஏதேனும் வழுவுக்காக அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணகத்துக்கான மேல் நீதிமன்றத்துக்கு அதற்கெதிராக மேன்முறையீடொன்றைச்''.

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

10 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

11 ஆம் வாசகம்

20 ஆம் பக்கத்தில் 21 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"வழுவுக்காக அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணகத்துக்கான மேல் நீதிமன்றத்துக்கு ”.

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

12 ஆம் வாசகம்

21 ஆம் பக்கத்தில் 25 முதல் 30 வரையிலான வரிகளையும் நீக்கிவிட்டு (இரண்டுமுட்பட) 22 ஆம் பக்கத்தில் 1 முதல் 4வரையிலான வரிகளையும் நீக்கிவிட்டு (இரண்டுமுட்பட) அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“உயர் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்வதற்கான உரிமை

**37**. அரசியலமைப்பினதும் வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கிணங்க —

(அ) இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றத்திலிருந்தான அல்லது அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்திலிருந்தான ஏதேனும் மேன்முறையீட்டில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஏதேனும் தீர்ப்பு அல்லது கட்டளைக்கெதிராக; அல்லது

(ஆ) மாவட்ட நீதிமன்றங்கள், குடும்ப நீதிமன்றங்கள், சிறுகோரிக்கை நீதிமன்றங்கள், நீதிவான் நீதிமன்றங்கள் அல்லது ஆரம்ப நீதிமன்றங்களிலிருந்தான ஏதேனும் மேன்முறையீட்டில் அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்தின் ஏதேனும் தீர்ப்பு அல்லது கட்டளைக்கெதிராக,

உயர் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்வதற்கான உரிமையொன்று இருத்தல் வேண்டும்.”.

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

13 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

14 ஆம் வாசகம்

22 ஆம் பக்கத்தில் 31 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"விடயத்துக்கேற்ப, இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றத்தின், அரசியலமைப்பின் 154ஏ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்தின், மாவட்ட நீதிமன்றத்".

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

15 ஆம் வாசகம்

22 ஆம் பக்கத்தில் 7 முதல் 13 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவைத் திருத்துதல்

**15**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில் 'இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்துக்கும் மாவட்ட நீதிமன்றங்கள், சிறுகோரிக்கை நீதிமன்றங்கள் மற்றும் நீதிவான் நீதிமன்றங்கள் ஆகிய ஒவ்வொன்றுக்கும்' என்னும் சொற்களுக்குப் பதிலாக, 'இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றத்துக்கும், அரசியலமைப்பின் 154ஏ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்துக்கும் மற்றும் மாவட்ட நீதிமன்றங்கள், குடும்ப நீதிமன்றங்கள், சிறுகோரிக்கை நீதிமன்றங்கள், நீதிவான் நீதிமன்றங்கள் அத்துடன் ஆரம்ப நீதிமன்றங்கள் ஆகிய ஒவ்வொன்றுக்கும்' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில், மேல் நீதிமன்றப் பதிவாளர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றப் பதிவாளர் மற்றும் அரசியலமைப்பின் 154ஏ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றப் பதிவாளர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.".

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

16 ஆம் வாசகம்

23 ஆம் பக்கத்தில் 17 முதல் 19 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"வழக்கில்—'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ஒரு இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றத்தில், அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துககான மேல் நீதிமன்றத்தில், மாவட்ட நீதிமன்றத்தில், குடும்ப நீதிமன்றத்தில் அல்லது சிறுகோரிக்கை நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட ஏதேனும்'';

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

17 முதல் 21 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

புதிய வாசகங்கள்

5 ஆம் பக்கத்தில் 14 ஆம் வரியை உடனடுத்துப் பின்வரும் புதிய வாசகத்தை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்:-

''முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு, ''மேல் நீதிமன்றத்தால்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றத்தால் அல்லது அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்தால்' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

''முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (அ) என்னும் பந்தியில், ''மேல் நீதிமன்றத்தால்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றத்தால் அல்லது அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்தால்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அதன் (ஆ) என்னும் பந்தியில், "மேல் நீதிமன்றத்தின் வேறு ஏதேனும் கட்டளை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றத்தின் அல்லது அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்தின் வேறு ஏதேனும் கட்டளை" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.

''முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு அதன் (1) ஆம் உட்பிரிவில், 'மேல் நீதிமன்றத்தின்' என்னும் சொற்களுக்குப் பதிலாக, 'இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றத்தின் அல்லது அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்தின்' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது." .

"வாசகம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் சட்டமூலத்தில் சேர்க்கப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6 ஆம் பக்கத்தில் 13 ஆம் வரியை உடனடுத்துப் பின்வரும் புதிய வாசகத்தை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்

**12**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில் 'மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு' என்னும் சொற்களுக்குப் பதிலாக, 'அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்துக்கு' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில், முறையே, "மேன்முறையீட்டு நீதிமன்றத்திடமிருந்து" மற்றும் "மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, முறையே "அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்திடமிருந்து" மற்றும் "அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்துக்கு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.” .

“வாசகம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் சட்டமூலத்தில் சேர்க்கப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

17 ஆம் பக்கத்தில் 25 ஆம் வரியை உடனடுத்துப் பின்வரும் புதிய வாசகத்தை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துதல்

**15**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு, "மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்துக்கு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.” .

“வாசகம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் சட்டமூலத்தில் சேர்க்கப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

22 ஆம் பக்கத்தில் 4 ஆம் வரியை உடனடுத்துப் பின்வரும் புதிய வாசகத்தை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவைத் திருத்துதல்

**18**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவை அதன் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும்ளூ அத்துடன்

(2) மீள இலக்கமிடப்பட்ட அதன் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(2) அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல்நீதிமன்றம் தவிர்ந்த முதனிலை நீதிமன்றம் ஒவ்வொன்றும், அத்தகைய முதனிலை நீதிமன்றத்திலிருந்து அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்துக்கான எல்லா மேன்முறையீட்டு விடயங்களிலும், அத்தகைய மேன்முறையீட்டில் ஆக்கப்பட்டு எடுத்துமொழியக்கப்பட வேண்டியவாறு, அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்தின் அத்தகைய எல்லாத் தீர்ப்புகளுக்கும் கட்டளைகளுக்கும் தீர்வைகளுக்கும், அத்தகைய தீர்ப்பு, கட்டளை அல்லது தீர்வை அத்தகைய முதனிலை நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்டு எடுத்து மொழியப்பட்டது என்றாற்போன்று அதேமுறையில் இசைந்தொழுகுதலும் அவற்றை நிறைவேற்றுதலும் வேண்டும்.".

"வாசகம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் சட்டமூலத்தில் சேர்க்கப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

"சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் அறிவிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது, திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்படி சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**13. மாகாணங்களின் மேல் நீதிமன்றம் (சிறப்பு ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் :** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"இச்சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக"என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்றது.

“சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக” என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 முதல் 3 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

“சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

“சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக” என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்படி சட்டமூலம் மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**14. குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

‘‘சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக” என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்றது.

“சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக” என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 மற்றும் 2 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

3 ஆம் வாசகம்

1 ஆம் பக்கத்தில் 16 முதல் 18 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

‘‘முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் IXஅ என்பதனை நீக்குதல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் IX அ (801 முதல் 833ண வரையிலான பிரிவுகள் இரண்டுமுட்பட) இத்தால் நீக்கப்படுகின்றது.” .

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4 ஆம், 5 ஆம் வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

“சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் அறிவிக்கப்பட்டது.

“சட்டமூலம் இப்பொழுது, திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக” என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்படி சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**15. கண்டிய திருமண, மணநீக்கம் (திருத்தச்) சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

“இச்சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக”என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்றது.

“சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக” என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 முதல் 11 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

“சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

“சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக” என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்படி சட்டமூலம் மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**16. நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் (திருத்தச்) சட்டமூலம் :** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்றது.

"சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 மற்றும் 2 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

2 ஆம் வாசகம்

2 ஆம் பக்கத்தில் 13 முதல் 20 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> 'அரசாங்கப் பகுப்பாய்வாளர்" என்பது, அப்போதைக்கு அரசாங்கப் பகுப்பாய் வாளராகப் பதவிவகிக்கின்ற ஆள் என்று பொருளாகும் என்பதுடன் மேலதிக அல்லது பிரதி அல்லது சிரேட்ட உதவி அல்லது உதவி அரசாங்கப் பகுப்பாய்வாளரையும் மற்றும் அரசாங்கப் பகுப்பாய்வாளராக, மேலதிக, பிரதி, சிரேட்ட உதவி அல்லது உதவி அரசாங்கப் பகுப்பாய்வாளராகச் செயலாற்றுவதற்கு நியமிக்கப்பட்ட எவரேனுமாளையும் உள்ளடக்கும்;

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 ஆம் வாசகம்

3 ஆம் பக்கத்தில் 24 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "தகுதிவாய்ந்த நீதிமன்றத்திற்கு, அத்தகைய சமர்ப்பணத் தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதியினுள் அவர் அனுப்புதல்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4 ஆம் பக்கத்தில் 3 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அரசாங்கப் பகுப்பாய்வாளரின் அபிப்பிராயம் தொடர்பில்";

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4 ஆம் பக்கத்தில் 19 முதல் 21 வரையிலான வரிகளை அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“பொதிகளும் அவுடதத்தின், தயாரிப்பின் அவசியமான”

இலச்சினைகளுமுட்பட அத்தகைய பதார்த்தத்தின், பொருளின் அல்லது நிழற்படங்களை எடுக்கும்படியும்,

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4 ஆம் வாசகம்

5 ஆம் பக்கத்தில் 28 முதல் 35 வரையிலான வரிகளையும் (இரண்டுமுட்பட) 6 ஆம் பக்கத்தில் 1 முதல் 3 வரையிலான வரிகளையும் (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவது இடப்படுகின்றது இடப்படுகின்றது:-

“விதி விலக்கான சூழ்நிலை களிற்றவிர 54அ மற்றும் 54ஆ என்னும் பிரிவுகளின் கீழான தவறொன்றுக்குப் பிணை இல்லை

**83**. (1) பிரிவுகள் 84 மற்றும் 85 என்பவற்றினதும் இப்பிரிவின் 2 ஆம் உட்பிரிவினதும் ஏற்பாடுகளுக்கமைய, இக்கட்டளைச் சட்டத்தின் 54அ மற்றும் 54ஆ என்னும் பிரிவுகளின்கீழான தவறொன்றுக்குச் சந்தேகிக்கப்படும் அல்லது குற்றஞ்சாட்டப்படும் ஆளொருவர், விதிவிலக்கான சூழ்நிலைகளில் தவிர மேல் நீதிமன்றத்தினால் பிணையில் விடப்படுதலாகாது.

(2) பிரிவுகள் 84 மற்றும் 85 என்பவற்றின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், பிரிவு 54அ வின் (1) ஆம் உட்பிரிவின்கீழான அல்லது பிரிவு 54ஆ வின் கீழான தவறொன்றுக்குச் சந்தேகிக்கப்படும் அல்லது குற்றஞ்சாட்டப்படும் ஆளொருவர்-

(அ) பிரிவு 77 அ வின் கீழ் அரசாங்க பகுப்பாய்வாளரால் வழங்கப்படும் அறிக்கையின் பிரகாரம், கடத்தப்பட்ட, இறக்குமதி செய்யப்பட்ட, ஏற்றுமதி செய்யப்பட்ட அல்லது உடைமையிலுள்ள அபாயகரமான அவுடதத்தின் உண்மையான அளவு பத்து கிராம்களுக்கு அல்லது அதற்கு மேற்பட்டதாக உள்ள போது; அத்துடன்

(ஆ) மரணதண்டனை அல்லது ஆயுட்கால மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படற் பாலதாகவுள்ளபோது, விதிவிலக்கான சூழ்நிலைகளில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினாற்றவிர, பிணையில் விடப்படுதலாகாது.

(3) இப்பிரிவின் நோக்கத்துக்காக அபாயகரமான அவுடதம் என்பது மோபின், கொக்கேயின், ஹெரோயின் மற்றும் மெதம்பெடமைன் எனப் பொருள்படும்.".

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் வாசகம்

5 ஆம் பக்கத்தில் 8 முதல் 13 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"84. பிரிவு 54அ வின் (1) ஆம் உட்பிரிவினதும் 54ஆ என்னும் பிரிவினதும் ஏற்பாடுகளின்கீழ் ஒரு நீதிமன்றத்தினால் விளங்கப்பட்டிராதவரும் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிராதவரும் தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டிராதவருமான சந்தேகிக்கப்பட்டவர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் ஒருவர், அவர்'';

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6 ஆம் பக்கத்தில் 25 முதல் 33 வரையிலான வரிகளை ( இரண்டுமுட்பட) அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"உட்பிரிவின் மற்றும் 54ஆ என்னும் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் ஒரு நீதிமன்றத்தினால் விளங்கப்பட்டிராதவரும் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிராதவரும் தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டிராதவருமான சந்தேகிக்கப்பட்டவர் அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவர் ஒருவர், பதியப்படவேண்டிய நல்ல, போதிய காரணங்களுக்காகப் பன்னிரெண்டு மாதங்களை விஞ்சுகின்ற காலப்பகுதியொன்றுக்குக் கட்டுக்காப்பில் தடுத்துவைக்கப்படுதல் வேண்டுமென அத்தகைய நீதிமன்றம் கட்டளையிடலாம்.'';

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6 முதல் 8 வரையான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

"சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் அறிவிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது, திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்படி சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**17. குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"இச்சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக"என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்றது.

"சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 முதல் 5 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

"சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்படி சட்டமூலம் மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**18. சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் (திருத்தச்) சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்றது.

"சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 ஆம் வாசகம்

1 ஆம் பக்கத்தில் 3 முதல் 7 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

**1.** (1) இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் ……..ஆம் இலக்க, சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இப்பிரிவு தவிர இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) வேறுபட்ட திகதிகள் இச்சட்டத்தின் வேறுபட்ட ஏற்பாடுகள் நடைமுறைக்கு வருவதற்காக நியமிக்கப்படலாம்.

(4) இப்பிரிவின் ஏற்பாடுகள், எந்தத் தேதியன்று இச்சட்டமூலம் பாராளுமன்றச் சட்டம் ஒன்றாக வருகின்றதோ அந்தத் தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்." .

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 முதல் 31 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

"சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்படி சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**19. அபாயகரமான விலங்குகள் (திருத்தச்) சட்டமூலம் :** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"இச்சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்றது.

"சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 முதல் 4 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

"சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்படி சட்டமூலம் மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**20. சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்:** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— (54 ஆம் அத்தியாயமான) சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் 94 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 யூலை 12 ஆம் திகதிய 2288/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்டதும் 2022.10.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**21. கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1):** கடற்றொழில் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2021 நவம்பர் 24 ஆம் திகதிய 2255/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**22. கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2):** கடற்றொழில் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் 64(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 61(1)(ஆ) ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2022 பெப்ரவரி 07 ஆம் திகதிய 2266/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**23. கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3):** கடற்றொழில் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,—1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2022 ஏப்ரல் 25 ஆம் திகதிய 2277/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**24. அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழ் தீர்மானம்:** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதி அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 2022 நவம்பர் 03 ஆம் திகதிய 2304/51 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் மற்றும் அதன் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.11.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**25. ஒத்திவைப்பு (பாடசாலை மாணவர்களைப் போதைப்பொருளிலிருந்து பாதுகாத்தல்) :** "இப் பாராளுமன்றம் இப்போது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்ற சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

அவ்வேளை நேரம் பி.ப.5.30 மணிக்கு மேலாகிவிடவே, பி.ப. 6.40 மணிக்கு பிரதிச் சபாநாயகர் இன்றைய சபைத் தீர்மானத்திற்கிணங்க பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம், 2022 நவம்பர் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு. ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.